# LAABH SAMACHAR

Volume: 10 | Issue : 10 | **JANUARY 2022** | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




நம் சமூகத்தின் அரசியல் துருவ நட்சத்திரம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. (அனந்து) A.G.S. ராம்பாபு அவர்களுக்கு

## இதயஞ்சலி (1962-2022)




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

**சௌபாக்கியாஸ்**

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO
அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343




TEXMO ®
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX ®
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles




பர்வதா டிரேடர்ஸ்
செல்: 94439 30728
Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available
37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014




• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633
Prop.: B.S. Rajan

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அல்கிதெஞ்கோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

ஸௌராஷ்ட்ர சமூகத்தின் அரசியல் பிரமுகர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு** அவர்களின் மறைவு, மதுரை மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. நமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு பல்வேறு நலன்களைச் செய்தவர். நமது சேம்பரின், அரசுத்துறை சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் கோரிக்களுக்கு பேருதவியாக இருந்தவர். அவரது பிரிவால் வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

நமது சேம்பர் அங்கத்தினர்கள், குறிப்பாக டெக்ஸ்டைல் துறையில் உள்ளவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான ஒரு செய்தி. மத்திய அரசு, துணி மற்றும் ஆயத்த ஆடைகள் மீதான வரியை 5% லிருந்து 12%க்கு உயர்த்தி, ஜனவரி 1, 2022 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தது. இதற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களுக்கும், தமிழக நிதி அமைச்சகம், ஜி.எஸ்.டி கவுன்சில், டெக்ஸ்டைல் துறை ஆகியவற்றுக்கு, 5% வரியே தொடர்ந்து இருக்க வேண்டி கடிதம் அனுப்பியது. டெக்ஸ்டைல் துறையினர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளும் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தி, கோரிக்கை வைத்தனர். அதன் காரணமாக 31.12.2021 அன்று நடைபெற்ற ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில், மேற்படி நடைமுறை ஒத்தி வைக்கப்படுகிறது என்ற அறிவிப்பு, டெக்ஸ்டைல் துறையினர்கள் பலரை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. இது நமது சேம்பருக்கு கிடைத்த மாபெரும் வெற்றியுமாகும்.

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப் புடைத்து**

**பொருள்:** (வாழ்க்கைச் சிறப்புக்களைக் கருதாவிட்டாலும்) மேலோர்கள் தம்முடைய மனநலம் கெட்டுப் போகாமலிருக்கப் பாதுகாப்பாகத் தாம் சேரும் இனம் நல்லதாக இருக்கவே விரும்புவார்கள்.

அதிகாரம் 46 — சிற்றினம் சேராமை — அரசியல்

(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)

**Sourashtra Chamber of Commerce Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

# பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

**16.11.2021** – **Waste Management** என்ற தலைப்பிலான நிகழ்ச்சி நமது சேம்பரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பரின் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினராக திரு. **A.S. கார்த்திக் பாபு** Senior Practitioner, Lean Management at WCO Consultants Pvt. Ltd. அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

**26.12.2021** – **லோன் மேளா** நிகழ்ச்சி, மாவட்ட தொழில் மையத்துடன் இணைந்து, காலை 10 மணி முதல் 4 மணி வரை மதுரை கீதா நடன கோபால நாயகி மந்திரில் நடத்தப்பட்டது. மாவட்ட தொழில் மைய இணை இயக்குனர் திரு. **எம். ராமலிங்கம்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு லோன் மேளாவை துவக்கி வைத்தார். இதில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**29.12.2022** – புதுச்சேரி மாநில உள்துறை அமைச்சர் திரு. **நமச்சிவாயம்** அவர்கள் மதுரைக்கு வருகை தந்திருந்தார். நமது சேம்பருக்கு கிடைத்த அழைப்பினை ஏற்று நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு கோரிக்கைகளைத் தெரிவித்தனர்.

**30.12.2022** – மதுரையில் உள்ள வருவாய் அலுவலகத்தில் ஆலோசனை மையத்தை திறக்க நமது சேம்பருக்கு வருவாய்த்துறை கண்காணிப்பாளரின் சிறப்பு அழைப்பினை ஏற்று நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**04.01.2022** – ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களின் பொக்கிஷம் ராஷ்ட்ரபந்து **ஸ்ரீமான் எல்.கே. துளசிராம்** அவர்களின் நினைவு நாள் 04.01.2022 அன்று நமது சேம்பர் அலுவலகத்தில் **மலரஞ்சலி** செலுத்தப்பட்டது.

**04.01.2022** – **வளமிக்க வாழ்க்கை** என்ற தலைப்பில் சேம்பர் வளாகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக **Dr. M.V. சுப்புராமன்** Prof. of Hindi (Retd.)., American College & Hindi Co-ordinator, Madurai Kamarajar University, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பரின் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். செயற்குழு உறுப்பினர் & இதழ்க்குழு சேர்மன் திரு. B.S. **ஜெனார்த்தனன்** அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

– K.K. தினேஷ்

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

நமது ஸௌராஷ்ட்ர சமுதாயத்தின் மற்றுமொரு அடையாளமாக திகழும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு** அவர்களின் மறைவு அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. மக்களின் நல்வரவைப் பெற்ற இவர், மூன்று முறை பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன். இதழ் குழு சார்பாக இரங்கலையும், அவரை இழந்து வாடும் அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த மாத இதழில், சேம்பரில் நடைபெற்ற ஓராண்டு நிகழ்வுகள் (2021) இடம்பெற்றுள்ளன. இந்த கொரோனா சூழலிலும் இத்தனை நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது என்பதை அங்கத்தினர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி

- B.S. ஜெனார்த்தனன்




அங்கத்தினர்கள் அனைவருக்கும்
**குடியரசு தின நல்வாழ்த்துகள்**

UIN No. Applied
MFG. No. 8/25 D

**பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.**
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க

**PLASMODIN CAPSULES 500 mg.**
Increase Immunity Power



Prop. : B.K.D. Suresh

4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk






# மாபெரும் லோன் மேளா



நமது
ஸௌராஷ்ட்ர சேம்பர்
தொழில் முனைவோர்களின் நிதி
தேவையை பூர்த்தி செய்வதற்காக
**லோன் மேளா** நிகழ்ச்சி, மாவட்ட தொழில்
மையத்துடன் இணைந்து கடந்த 26.12.2021 அன்று
காலை 10 மணி முதல் 4 மணி வரை மதுரை கீதா நடன
கோபால நாயகி மந்திரில் நடத்தப்பட்டது. இந்த மேளா, பொது
மக்களும் கலந்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
மாவட்ட தொழில் மைய இணை இயக்குனர் திரு. **எம். ராமலிங்கம்**
அவர்கள் மேளாவைத் துவக்கி வைத்தார். இதில் நடைபெற்ற சிறப்புக்
கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள்
தலைமைத் தாங்கினார். திரு. **எம். ராமலிங்கம்** அவர்கள் தொழில் கடன்
பற்றிய திட்ட விபரங்களையும், சந்தேகங்களுக்கு விளக்கமும் அளித்தார்.
இந்த மேளாவில், 14 அரசு மற்றும் தனியார் துறை வங்கிகள், அரசு நிதிக்
கழகங்கள் கலந்து கொண்டன. 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள்
மற்றும் சேம்பர் அங்கத்தினர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
இந்த மேளா, தொழில் கடன் மட்டுமல்லாது, வீடு, வாகனம், கல்வி
மற்றும் தனிநபர் கடன் பெறுவதற்கான வாய்ப்பாகவும்
அமைந்தது. இந்த நிகழ்ச்சியை சேம்பர் நிகழ்ச்சிக்குழு
சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் ஏற்பாடு
செய்தார். ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி தலைவர்
திரு. **T.S. சாரதி** அவர்களும் கலந்து
கொண்டு சிறப்பித்தார்.









**Sowndarya Traders**
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733
*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care



PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# சேம்பர் நிகழ்ச்சிகள்




2021ம் ஆண்டின் நவம்பர் மாத நிகழ்ச்சியாக **Waste Management** என்ற தலைப்பில் 16.11.2021 – மாலை 6.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பரின் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினராக திரு. **A.S. கார்த்திக் பாபு** Senior Practitioner, Lean Management at WCO Consultants Pvt. Ltd. அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

Waste Management என்றவுடன் 'கழிவு பொருட்களை கையாளும் மேலாண்மை யுத்தி' என நீங்கள் நினைக்கலாம். ஆனால், இக்கூட்டத்தின் தலைப்பானது, நம் தொழிலில், 'சரியான திட்டமிடலுடன் செயல்பட்டு, தேவையற்ற விஷயங்களை நீக்குவதும் கூட Waste Management' என்ற அடிப்படையில் நடத்தப்பட்டது. அதன்படி, நம் தொழிலில் 'ஆற்றல், நேரம், பணம்' போன்றவைகளை எவ்வாறு மிச்சப்படுத்துவது பற்றி அறிந்துகொள்ள இத்தலைப்பிலான கூட்டம் ஏற்பாடு செய்யபட்டது. இக்கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்தக் கூட்டத்தில், லாப் ஸமாச்சார் இதழில் கேட்கப்படும் கேள்வி பதில் போட்டிக்கு சரியான பதில் அளித்து, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட **ஷியாமளா ஸ்டிக்கர்** உரிமையாளர் திரு. **சிவப்பிரசாத்** அவர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.




2022ம் ஆண்டின் முதல் மாத நிகழ்ச்சி, அங்கத்தினர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்துகொள்ளும் வகையில் **வளமிக்க வாழ்க்கை** என்ற தலைப்பில் 04.01.2022 – மாலை 6.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பரின் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். செயற்குழு உறுப்பினர் & இதழ்க்குழு சேர்மன் திரு. B.S. **ஜெனார்த்தனன்** அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்தார். சிறப்பு விருந்தினராக திரு. **Dr. M.V. சுப்புராமன்** Prof. of Hindi (Retd.)., American College & Hindi Co-ordinator, Madurai Kamarajar University, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

**Dr. M.V. சுப்புராமன்** அவர்கள், பல துறைகளிலிருந்து பல்வேறு தகவல்களை சேகரித்த அனுபவத்தை ரசமாக, நகைச்சுவையுடன் பேசி அனைவரையும் கவர்ந்தார். பற்றற்ற நிலையில் செய்யப்படும் அனைத்து செயல்களும் வளமான வாழ்க்கையை நீண்ட நாளுக்கு அளித்திடும் என்ற தாரக மந்திரத்தை மிக அருமையான விளக்கங்களுடன் பேசினார். கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்தக் கூட்டத்தில், லாப் ஸமாச்சார் இதழில் கேட்கப்படும் கேள்வி பதில் போட்டிக்கு சரியான பதில் அளித்து, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட **சுரேஷ் ஃபேஷன்** உரிமையாளர் திரு. **சுரேஷ் பாபு** அவர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.




Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.



# Siva Dental Care

## TYPES OF DENTAL CARE




தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி

243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com

# சேம்பரின் கோரிக்கைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி

Respected Hon'ble Minister Smt. Nirmala Sitaraman,

Our members, who are associated with Textiles, are very much disturbed to hear the announcement of increase of GST for fabrics from 5% to 12%.

They wanted us to represent about the setback that they would face if it is revised from the present level.

**We give below their views:-**

1. Before introduction of GST, there was no tax for fabrics but in the interests of the Country, that sector accepted 5% tax, which should be favorably considered.
2. Already the power loom sectors are suffering seriously with the increase of yarn rates and now with the additional burden, they would be in deep trouble.
3. The cloth payment is normally for 3 months' credit period, for which the difference in working capital needed will be roughly 25% additional. This extra amount will be very tough to provide in this crucial situation.
4. When raw cotton and 100% cotton yarn are in 5% slab, it is not reasonable to levy cotton fabric at 12% which they feel like penalized.
5. The manufacturers of fabric are mostly from handloom segment and unorganized powerloom sectors. If they are taken for granted, that will indirectly affect the employment and economy of our Country.
6. Above all, the purpose of GST will be defeated as this would encourage the old unhealthy procedure of evading the tax. parallel economy etc.,

We sincerely hope that the ruling Modi ji's efficient Government will consider our plea favorably and revert back to the existing 5% tax structure for cotton fabrics.

Eagerly awaiting to hear from you the positive news..

உணவுக்கு அடுத்தபடியாக, ஆடைத் தொழிலே மனிதனின் அடிப்படைத் தேவையாக விளங்கி வருகிறது. ஜி.எஸ்.டி வருவதற்கு முன்பு வரை வரிவிதிப்புகள் துணி மற்றும் ஆயத்த ரகங்களுக்கு இருந்ததில்லை. ஜி.எஸ்.டி. வந்த பிறகு குறைந்தபட்ச விதிகமான 5% விதிக்கப்பட்டது. சமீபத்தில், மத்திய அரசு இந்த வரி விகிதத்தை 12% உயர்த்தி, 01.01.2022 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவித்தது. இதனையடுத்து, டெக்ஸ்டைல் பிரிவினர், டெக்ஸ்டைல் அமைப்புகள் அனைவரும் இணைந்து மத்திய அரசுக்கு இந்த கூடுதல் வரி விதிப்பை திரும்பப் பெற வழியுறுத்தின. நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தின் பிரதான தொழில் டெக்ஸ்டைல் துறை. இதில் நமது சமூகத்திற்கான வாழ்வாதாரமும் அடங்கி இருக்கிறது. வரி உயர்வு ஏற்பட்டால் நமது சமூகத்தின் பொருளாதாரமும் மிகவும் பாதிக்கப்படும். வரியைக் குறைக்கக் கோரி டெக்ஸ்டைல் துறையை சார்ந்த சுங்குடி சேலை உற்பத்தியாளர்களின் கடிதமும் நமது சேம்பருக்கு கிடைக்கப்பெற்றது. ஆகவே, இந்த முக்கியமான பிரச்சினைக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கடந்த டிசம்பர் மாதம் மத்திய அரசுக்கு மிக அழுத்தமாக, இந்த வரி உயர்வை திரும்பப் பெறக் கோரி மத்திய நிதி அமைச்சகம், ஜி.எஸ்.டி வரி கவுன்சில், டெக்ஸ்டைல் துறை மற்றும் தமிழக நிதி அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பியது. (கடிதத்தின் விபரம் இடது பக்கம் காணலாம்). இதன் பயனாக, 31.12.2021 அன்று நடைபெற்ற ஜி.எஸ்.டி சிறப்பு கவுன்சில் கூட்டத்தில், டெக்ஸ்டைல் துறை மீது விதிக்கப்பட்ட வரி உயர்வு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிப்பு வெளியானது. இது துணி மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தித் துறையினர் அனைவருக்கும் நிம்மதியை அளித்துள்ளது.


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை–1. CELL: 92445 00633 | 99433 79499

EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன்

# சிறப்பு சந்திப்பு & நிகழ்வுகள்





புதுச்சேரி மாநில உள்துறை அமைச்சர் திரு. **நமச்சிவாயம்** அவர்கள், கடந்த 29.12.2021 அன்று மதுரைக்கு வருகை தந்திருந்தார். மதுரையில் உள்ள பற்பல சமுதாயப்பெருமக்களை சந்தித்து அச்சமுதாயத்தினரின் கோரிக்கைகளை மத்திய அரசுக்கு கொண்டு சென்று தீர்வு காண்பதற்காக சிறப்புக் கூட்டம் மதுரையில் ஏற்பாடு செய்யபட்டிருந்தது. நமது சேம்பருக்கு கிடைத்த அழைப்பினை ஏற்று நமது சேம்பர் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். கூட்டத்தில், தொழில், ஜி.எஸ்.டி வரி பிரச்சினை மற்றும் நமது ஸௌராஷ்ட்ர சமுதாய வளர்ச்சிக்கான கோரிக்கைகள் ஆகியவற்றை குறித்து அளிக்கப்பட்டது. நமது நிர்வாகிகள் அமைச்சர் அவர்களை பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.



மத்திய அரசு வரி செலுத்துவோரின் நலனுக்காக ஆலோசனை மையத்தை நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த 30.12.2021 அன்று துவக்கியது. மதுரையில் உள்ள வருவாய் அலுவலகத்தில் ஆலோசனை மையத்தை திறக்க நமது சேம்பருக்கு சிறப்பு அழைப்பு கிடைத்ததை ஏற்று நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உடன் வருவாய் வரித்துறை ஆணையர் திரு. **சிவக்குமார்** & வரி ஆலோசகர் **எக்ஸெல். கே. பழனிச்சாமி** ஆகியோர் உள்ளனர்.



ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களின் பொக்கிஷம் ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் நினைவு நாள் 04.01.2022 அன்று நமது சேம்பர் அலுவலகத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் சேவைகள், புகழ் ஆகியவை நினைவு கூறப்பட்டது.

**GSTR-9 Due Date Extended**

The due date for furnishing annual return in FORM GSTR-9 & self-certified reconciliation statement in FORM GSTR-9C for he financial year 2020-21 has been extended from 31.12.2021 to 28.02.2022. Notification No. 40/2021-Central Tax dated 29.12.2021 to effect has been issued.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com





பொ4த்துரங்க3ன் Travel கெரத்தோ

அங்கோ3 call கெருவோ

**99430 31237**

நன்கு
சுத்தப்படுத்தப்பட்ட கார்கள்

# PICK UP / DROP

VH
VEDHAVALLI
HOLIDAYS

from anywhere
to anywhere
across
south india



**BOOK NOW**

**99430 31237**

www.vedhavalliholidays.com

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

VH
VEDHAVALLI
HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

TIRUNELVELI ❖ MADURAI ❖ CHENNAI

# 2021

## சேம்பர்–ன் ஓராண்டு செயல்பாடுகள்

## 2021ம் ஆண்டு சேம்பரில் நடைபெற்ற தொழில் கூட்டங்கள்



1

**05.01.2021** – **ஆபரணம்** என்ற அழகான தலைப்பில் அற்புதமான நிகழ்ச்சி இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சி மிகச்சிறப்பாக அமைந்தது. இந்த கூட்டத்தில் ஸௌராஷ்ட்ர பொற்கொல்லர்கள் சங்கத் தலைவர் திரு. B.J. **கேசவகுமார்** மற்றும் செயலாளர் திரு. L.T. **மணிகண்டன்** ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக் குழுத்தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.



2

**09.02.2021** – **மத்திய பட்ஜெட் 2021 மற்றும் ஜி.எஸ்.டி.** பற்றிய நிகழ்ச்சி சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இது குறித்து விளக்கமளிக்க CA. J. **பால சுப்பிரமணியன்** மற்றும் CA. G. **சரவணக்குமார்** Chartered Accountants, Partners, M/s. B.S.L.S. and Associates, Mdu. ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாடினர். இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.



3

**02.03.2021** – நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தின், உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு துறைசார் தொழில் முனைவோர்களின் **உணவு தரம், விதிமுறைகள் மற்றும் பயன்கள்** குறித்து விளக்குவதற்காக சிறப்புக் கூட்டம் சேம்பர் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். உணவு பாதுகாப்பு அதிகாரிகள், அலுவலர்கள் பலர் பங்கேற்றனர். இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக Dr. V. **ஜெயராமபாண்டியன்**, M.B.B.S., M.D., நியமன அலுவலர், உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி அவர்களுடன் FSSAI துறை அலுவலர்கள் 12 பேர் கலந்து கொண்டனர். **ஸௌராஷ்ட்ர உணவு தயாரிப்பாளர் சங்க** நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேம்பரின் அழைப்பினை ஏற்று கலந்து கொண்டு பயன்பெற்றனர்.




4

**23.05.2021** – மே மாத தொழில் வர்த்தக கூட்டம் ஜூம் காணொலி செயலி வழியாக நடத்தப்பட்டது. டெக்ஸ்டைல் குறித்து இருவேறு தலைப்புகளில் நடைபெற்றது. **Textile Project Selection and Opportunities in HOME TEXTILES** என்கிற தலைப்பிற்கு திரு. C.D.M. **தினகரன்** President, Operations, Patspin India Ltd. and GTN Enterprises Ltd., Udumalpet அவர்களும், **BRANDING & Its Benefits** என்கிற தலைப்பிற்கு திரு. M.K. **கணேஷ் பாபு**, Ex. President, VIP Clothing., Mumbai அவர்களும் உரையாற்றினர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.




5 **11.06.2021** – **Problems, Solutions & Innovations in Building Construction** என்ற தலைப்பிலான இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திரு. P.T. **பாபு** CEO., M/s. Kannan Builders & MD., Ramtec Construction Covers and Block Pvt. Ltd. Thiruvarur அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இவர் நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும் ஆவார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.




6 **08.07.2021** – நமது சேம்பரின் மாதாந்திர கூட்டம் மாலை 6.30 மணி அளவில் ஜூம் காணொலி செயலி வழியாக நடைபெற்றது. **Retail and Wholesale Enterprises under the MSME Category** என்ற தலைப்பிலான இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. KR. **ஞானசம்பந்தன்,** தலைவர். லகு உத்யோக் பாரதி, மதுரை, அவர்கள் கலந்த கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.




7 **05.10.2021** – **அந்தாமானில் தொழில் வாய்ப்புகள்** என்ற தலைப்பிலான நிகழ்ச்சி, ஜூம் செயலி வழியாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக அந்தமானில் உள்ள Er. T.N. **கிருஷ்ணமூர்த்தி,** Chief Engineer & Administration Andaman Lakshadweep Harbour Works, Ministry of Shipping அவர்கள் கலந்து கொண்டு தொழில் வாய்ப்புகள் குறித்து விரிவாக பேசினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஒருங்கிணைத்தார். செயற்குழு உறுப்பினர் திரு. V.V. **ராம்லக்ஷ்மண்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.



8 **16.11.2021** – **Waste Management** என்ற சிறப்புக் கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் தலைப்பானது, நம் தொழிலில், சரியான திட்டமிடலுடன் செயல்பட்டு, தேவையற்ற விஷயங்களை நீக்குவதும் கூட **Waste Management** என்ற அடிப்படையில் நடத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினராக திரு. A.S. **கார்த்திக் பாபு,** Sr. Practitioner, Lean Management, WCO Consultants Pvt. Ltd. அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஒருங்கிணைத்தார். கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



9 **07.12.2021** – டிசம்பர் மாத தொழில் கூட்டம், **சிறு, குறு தொழில்களுக்கு கடன் வாய்ப்புகள்** என்ற தலைப்பில் மாலை 6.45 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில், சிறு தொழில் வளர்ச்சிக் கழக துணை மேலாளர் திரு. R. **பரமசிவம்** மற்றும் மேலாளர் திரு. S. **சந்திரசேகரன்** ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

# 2021ம் ஆண்டு சேம்பர் நடத்திய பொது நல நிகழ்வுகள்



1

**26.01.2021** – பாரத தேசத்தின் **72ம் ஆண்டு குடியரசு தின விழா** சேம்பர்-ல் கொண்டாடப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தேசியக்கொடியை ஏற்றினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக Dr. S.N. **கார்த்திக்**, Sr. Consultant, Neurologist, Apollo Hospitals, Mdu. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.




2

**16.04.2021** – நாடு முழுவதும் கொரோனா இரண்டாம் அலை தாண்டவமாடி வரும் நிலையில் அதிலிருந்து விழிப்புணர்வுடன் நம்மை தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகளை தனிநபர், தொழில்துறையினர் ஆகியோர் அறிந்துகொள்வதற்காக **கொரோனா இரண்டாம் அலை-தற்காப்பு வழிமுறை கூட்டம்** சேம்பரில் நடத்தப்பட்டது. இதில், மதுரை, சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர், **மரு. கா.வி. அர்ஜுன் குமார்** எம்.பி.பி.எஸ்., டி.பி.எச்., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.



3

**23.04.2021** – பொது மக்களின் நலன் கருதி **கொரோனா தடுப்பூசி முகாம்** கீதா நடன கோபால நாயகி மந்திரில் நடத்தப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான (முதல் தவணை) இந்த முகாமில் 431 பேர் கலந்து கொண்டு தடுப்பூசியை செலுத்திக்கொண்டனர். இந்த முகாம், சேம்பர் செயற்குழு உறுப்பினர் Dr. A.R. **கணேசன்** அவர்கள் வழிகாட்டுதலில், செயற்குழு உறுப்பினர் திரு. N.S. **பிரேம்குமார்**, திரு. T.R. **சரவணன்**, திரு. S.K.B. **சந்திரபிரகாஷ்** மற்றும் திரு. B.S. **ஜெனார்த்தனன்** ஆகியோர் குழு உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டனர்.



4

**29.05.2021** – **இரண்டாவது முறையாக கொரோனா தடுப்பூசி முகாம்** காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை கீதா நடன கோபால நாயகி மந்திர் அரங்கிலும், நிலையூர் கைத்தறி நகரில் உள்ள N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளியிலும் ஏற்பாடு செய்திருந்தது. இந்த இரண்டு முகாமிலும் 18 வயது முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்காக நடத்தப்பட்டது. இந்த முகாம், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், NEXTGEN மற்றும் கீதா நடன கோபால நாயகி மந்திர் கவுன்சில் இணைந்து நடத்தியது. **இந்த முகாமில், 828 பேர்** கலந்து கொண்டு **தடுப்பூசியை செலுத்திக்கொண்டனர்.** கைத்தறிநகரில் உள்ள N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளியுடன் இணைந்து நடத்தப்பட்ட முகாமில் **790 பேர் தடுப்பூசியை செலுத்திக் கொண்டனர்.**




5

**01.08.2021** – ஜூம் காணொலி வழியாக மாபெரும் **பென்சில் ஓவியப் பயிற்சி** நிகழ்ச்சி குழந்தைகள் மற்றும் மாணவர்கள், ஓவியப் பயிற்சியில் ஆர்வம் உள்ளவர்கள் ஆகியோருக்காக இந்த சிறப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. 400க்கும் மேற்பட்டவர்கள் முன்பதிவு செய்திருந்தனர். ஓவியப்பயிற்சியாளராக விக்னேஷ் கிராஃபிக்ஸ் உரிமையாளர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் கலந்து கொண்டார். MJF Lion CA. **R. மணிகண்டன்** District Governor அவர்கள் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். திரு. **B.R.J. கண்ணன்** M.D.D.M., Cardio, Senior Consultant & Interventional Cardiologist, Vadamalayan Hospital, Madurai அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் திரு. **J. வீரநாதன்** Sri Balaji Institute of Computer Technology அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




6

**15.08.2021** – பாரத தேசத்தின் **75வது சுதந்திர தினம்** கொண்டாடப்பட்டது. சரியாக காலை 8.30 மணி அளவில் தேசியக்கொடியை சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் ஏற்றினார். விழாவில் சிறப்பு விருந்தினராக ஜெய்கங்கா அப்பேரல்ஸ் உரிமையாளரும், பசுமை இயக்கம், மதுரை பந்தடி மகால் மக்கள் நல வாழ்வு சங்கம் ஆகிய அமைப்பின் தலைவருமான திரு. K.N.K. **ரவீந்திரன்** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். மரங்களை வெட்டுவதை முடிந்த வரையில் தவிர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டு, சுதந்திர போராட்டத்தையும், கார்கில் போரில் வீர மரணமடைந்த வீரர்களையும் நினைவுகூர்ந்தார்.



7

**23.08.2021** – **N.K. குப்பய்யன்-ரத்னாமணி பள்ளி, ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்,** NEXTGEN **மற்றும் மதுரை மாவட்ட சுகாதாரத் துறை** இணைந்து **மூன்றாவது முறையாக கொரோனா இலவச தடுப்பூசி முகாம்** நடத்தியது. காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில், 219 பேர் முதல் தவணை தடுப்பூசியும், 459 பேர் இரண்டாம் தவணை தடுப்பூசியுமாக மொத்தம் 718 பேர் செலுத்திக்கொண்டு பயனடைந்தனர்.



8

**03.09.2021** – **மதுரை காந்தி N.M.R. சுப்பராமன் மகளிர் கல்லூரி, ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்,** NEXTGEN **மற்றும் மதுரை மாநகராட்சி** இணைந்து **நான்காவது முறையாக கொரோனா இலவச தடுப்பூசி முகாம்** நடத்தியது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் முதல் தவணை தடுப்பூசியும், இரண்டாம் தவணை தடுப்பூசியுமாக மொத்தம் 491 பேர் செலுத்திக்கொண்டு பயனடைந்தனர்.

## 2021ம் ஆண்டு சேம்பர் நடத்திய தொழில்முனைவோர் நல நிகழ்வுகள்



1

**07.09.2021** – தமிழ்நாடு வணிகநல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும் நிகழ்ச்சி நமது சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திருமதி. **P. தீபா** Deputy Commissioner (GSTState), Madurai East, Madurai. அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. **K.S. லட்சுமி நாராயணன்** Asst. Commissioner (GST State), Tamilsangam Rd., Assessment Circle, Madurai அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். சிறப்பு அழைப்பாளர் திரு. L.B. **அசோக் குமார்** அவர்கள் ஏற்பாடு செய்தார். 50க்கும் மேற்பட்டவர்கள் உறுப்பனராக இணைய விண்ணப்பப்படிவம் அளித்தனர்.




2

**26.12.2021** – தொழில் துறையினர்களின் நிதி சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக **லோன் மேளா** நிகழ்ச்சி கீதா நடன கோபால நாயகி மந்திரில் நடைபெற்றது. 14 ஸ்டால்கள் அமைக்கப்பட்டன. இதில் அரசு மற்றும் தனியார் துறை வங்கிகள் கலந்து கொண்டன. தொழில் மட்டுமல்லாது, பொது மக்களின் நலன் கருதி அனைத்து தேவைகளுக்கான கடன் உதவிகளுக்காகவும் நடத்தப்பட்டது. இந்த மேளாவின் சிறப்பு விருந்தினராக மாவட்ட தொழில் மைய இணை இயக்குனர் திரு. M. **ராமலிங்கம்** அவர்கள் கலந்து கொண்டு மேளாவை துவக்கி வைத்தார். சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார்.



**04.01.2021** - மதுரை ராஷ்ட்ரபந்து **ஸ்ரீமான் எல்.கே. துளசிராம்** அவர்களின் **151வது பிறந்த நாள்** சேம்பர் வளாகத்தில் **கொண்டாடப்பட்டது**. அவரின் ஆற்றல் மிக்க செயல்பாடுகளை அடுத்த சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பள்ளி மாணவர்கள் பங்கு பெறச் செய்து கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டது. இந்த கட்டுரைப்போட்டிக்கு நிலையூர் **N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளி** மாணவர்கள் மற்றும் தெப்பக்குளம் **ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி** மாணவர்களும் பங்கு கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக மதுரை முன்னாள் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. **S.S. சரவணன்** அவர்களும், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் திரு. **S.R. சுந்தர்நாத்**, உரிமையாளர், அமர்டெக் அவர்களும் கலந்து கொண்டனர்.

# 2021ம் ஆண்டு சேம்பர் நடத்திய சமூக நல நிகழ்வுகள்



**20.02.2021** - **ஸௌராஷ்ட்ர சமூக கலாச்சார மேம்பாட்டிற்காக சிறப்புக் கூட்டம்** மாலை 4.00 அளவில் சேம்பர் வளாகத்தில் நடத்தப்பட்டது. இதில் சேம்பர் நிர்வாகிகள் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினராக Hindu Spritual and Service Fair - Community Co-ordinator திரு. **சத்ய நாரயாணன்** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்தை சென்னை திரு. சோலை S.R. **அமர்நாத் பாபு** அவர்கள் ஏற்பாடு செய்தார்.



**11.11.2021** -**ஸௌராஷ்ட்ர சமூக அனைத்து சபை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. **எஸ்.எஸ். சரவணன்** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், சேம்பர் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் அரசியல், தொழில், வர்த்தகம் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்திற்கு, நமது சமூகத்தின் அனைத்து சபை நிர்வாகிகளும் கலந்த கொண்டனர்.



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

https://youtu.be/-JMVniVMLr0

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

*Exclusive Showroom for U'r Branded Products*

IDEAL Innerwear · ANAND · Viking · Prithvi Inner Wears · NAIDU HALL The Family Store · JOCKEY Inner Wear · Poomex · MANGAI Nighties · RASATHE Darling Nighties · YOKE'S Nighty

*& All Branded Innerwears for All*

Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்

உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402

HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

# புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

## திட்ட விளக்கம்

முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் பயன் பெறும் வகையில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) என்ற மானியத்துடன் கூடிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்ட மதிப்பீடு:** தகுதி வாய்ந்த உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் குறைந்தபட்சம் ரூ. 10 லட்சம் முதல் அதிகபட்சம் ரூ. 500 லட்சம் வரை.

**விண்ணப்பதாரர்கள் தகுதி:**

**கல்வித் தகுதி:** குறைந்த பட்ச கல்வித்தகுதியாக +2 தேர்ச்சி (HSC) அல்லது ஏதேனும் இளங்கலை பட்டப்படிப்பு / டிப்ளமோ / ஐ.டி.ஐ / அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழிற்பயிற்சி கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது வரம்பு:** பொதுப்பிரிவை சார்ந்த ஆண்கள் விண்ணப்பதாரர்கள் 21 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். பெண்கள், பின் தங்கிய வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கையர் ஆகிய சிறப்பு பிரிவினர் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

**குடும்ப ஆண்டு வருமானம்:** குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு இல்லை.

**இருப்பிடம்:** விண்ணப்பதாரர் தமிழ்நாட்டில் 3 ஆண்டுகள் வசித்துவருபவராக இருத்தல் வேண்டும்.

**மானியம்:** 25% (அதிகபட்சம் ரூ. 75லட்சம் வரை) மற்றும் 3% பின்முனை வட்டி மானியம்.

**சொந்த முதலீடு:** திட்ட மதிப்பீட்டில் பொதுப்பிரிவை சார்ந்த ஆண்கள் 10 விழுக்காடும் மற்றும் சிறப்பு பிரிவினர் 5 விழுக்காடும் சொந்த முதலீடு செலுத்த வேண்டும்.

**தகுதியுள்ள தொழில்கள்:** அனைத்து விதமான உற்பத்தி மற்றும் சேவை தொழில்களுக்கு (எதிர்மறையா பட்டியல் நீங்கலாக), இத்திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:** பயனாளிகள் *www.msmetamilnadu.tn.gov.in* என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து கீழ்கண்ட ஆவணங்களின் இரண்டு நகல்களுடன் சேர்த்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.


**இணைப்பு:**

- புகைப்படம்,
- பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / ஐடிஐ தேர்ச்சி சான்றிதழ், மதிப்பெண் பட்டியல்,
- குடும்ப அட்டை அல்லது இருப்பிடச் சான்றிதழ்,
- ஆதார் கார்டு,
- உறுதிமொழிப் பத்திரம் (Affidavit for first generation obtained from notary public in Rs. 20 stamp paper)
- வாடகை ஒப்பந்தப் பத்திரம் அல்லது இடப்பத்திரம் நகல்,
- கட்டட வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு எஸ்டிமேட்,
- விலைப்புள்ள (With GST Number),
- திட்ட அறிக்கை (Project report with cash flow statement for 3 years from CA)

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
அழகர்கோவில் ரோடு,
மதுரை-2.
தொலைபேசி: 0452 253 7621
இமெயில்: dicmdu2011@gmail.com



https://fb.watch/aEA8p7A6cD/



# நம் சமூகத்தின் அரசியல் துருவ நட்சத்திரம்
# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
# A.G.S. ராம்பாபு அவர்களுக்கு
# இதயஞ்சலி

நமது சமூகத்தின் மிக முக்கிய பிரமுகரும், அரசியல் வாழ்வில் தனித்த அடையாளம் கொண்டவருமான திரு. **ஏ.ஜி.எஸ். ராம்பாபு** அவர்கள் கடந்த 11.01.2022 - செவ்வாய்க்கிழமை அன்று இரவு 9 மணி அளவில் காலமானார் என்ற செய்தி நமது சமூக மக்களுக்கு மட்டுமல்லாது மதுரை வாழ் அனைத்து சமுதாய மக்களுக்கும், அரசியல் பிரமுகர்களுக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

உடல் நலமின்றி சிகிச்சையில் இருந்த அவருக்கு கொரோனா தொற்றும் உறுதி செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், அவர் மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார். இவர், அரசியல் வானில் நட்சத்திரமாக இருந்த **ஏ.ஜி. சுப்புராமன்** அவர்களின் மூத்த புதல்வன் என்பது அனைவரும் அறிந்ததே.

